# Social de-construction and cultural reformation: Seethalai Saathanar in Manimekalai

**Dr. M. Kalavathy*,**
*Asst. professor, Dept. of Journalism and Communication,*
*University of Madras, Chepauk, Chennai.*
*ORCiD: https://orcid.org/0009-0006-5281-2723*

***Corresponding Author Email:** kalavathymu@gmail.com Mobile Number: 9865052631

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 24, 2025
Revised
December 24, 2025
Accepted
December 26, 2025
Published
January 01, 2026

**ABSTRACT**

This study examines at how Koolavanigar Seethalai Sathanar, the author of the epic poem Manimekalai, offers suggestions for cultural transformation while deconstructing the dominant beliefs and customs (meta-narratives) of the society at the time. One of the important reforms in storytelling is that the majority of the narrative is supported by female characters. Sathanar's Manimekalai can be interpreted as a work that challenges the prevailing societal ideologies of the time and encourages cultural change by addressing hunger relief, encouraging love for all living things, and alleviating real-life suffering.

**Key words**: *Meta narrative, Deconstruction, Cultural reformation, Manimekalai, Abuthiran and Seethalai Saathanar.*

**References:**

1. K.T.K. Thangamani (2015). About Manimekalai. New Century Book House, Chennai.
2. P. Sathyamurthy (2020). Social Thoughts in Manimekalai.
3. Muthukamalam, International Online E-journal. http://www.muthukamalam.com/essay/literature/p73.html
4. R. Sumathi. (2022). Moral Principles Shown by Manimekalai, International Tamil Research Journal (Volume 4, Issue 19). https://files.core.ac.uk/download/553304969.pdf
5. Avvai S. Duraisamy Pillai. (1942). Manimekalai Research. South Indian Saiva Siddhanta Works Publishing Society. https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0753.pdf
6. V.P. Devadatta, (2023). Buddhist Principles Mentioned in Manimekalai. https://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2023-html-p2023166-2910
7. Lourdes Jovani. (2002). An Analysis of the Metaphorical Method of the Tamil Epic Manimekalai.
8. Krishnaswamy Iyengar. (1928). Manimekalai in Historical Context, London.
9. P. Velusamy. (2014). Manimekalai - What was Understood and Not Understood in the Philosophical Dialogue. https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamjun2014/26948-2014-08-08-07-12-53

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# சமூக கட்டுடைப்பும் பண்பாட்டு சீர்திருத்தமும் - சீத்தலை சாத்தனாரின் மணிமேகலை

***முனைவர் மா. கலாவதி,**

உதவிப்பேராசிரியர், இதழியல் மற்றும் தொடர்பியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

மணிமேகலை எனும் காப்பிய நூலில், அக்காலத்தைய சமூகத்தின் பழக்க வழக்கத்தையும், பெரும்பான்மை நம்பிக்கைகளையும் (meta narrative) உடைத்து (De-construct), எவ்வாறு பண்பாட்டு சீர்திருத்தக் கருத்துக்களை முன் வைக்கிறார் ஆசிரியர் கூலவணிகர் சீத்தலை சாத்தனார் என ஆராய்கிறது

இக்கட்டுரை. பெரும்பகுதி கதையை பெண் கதாபாத்திரங்களே தாங்கி நிற்கும் தூண்களாக வடிவமைத்திருப்பது, கதைசொல்லலின் முதல் சீர்திருத்தமாக பார்க்கப்படுகிறது. பசிப்பிணி போக்க, அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த, நிஜ வாழ்வின் துன்பம் போக்க, அதுவரை பின்பற்றிய பெரும்பான்மை சமூக நம்பிக்கைகள் உடைக்கப்பட்டு, பண்பாட்டு சீர்திருத்தம் செய்வதாகவே சாத்தனார் எழுதிய மணிமேகலையை காணமுடிகிறது.

**முன்னுரை:**

தமிழின் ஆகச் சிறந்த இலக்கியங்களில் ஐம்பெரும் காப்பியங்களும் அடங்கும். அவற்றில் மணிமேகலை எனும் காப்பியம், மனிதம் காக்கும் புத்த மதத்தை மையமாகக் கொண்டு, பெண் கதாபாத்திரத்தின் பெயரை தாங்கி நிற்கும், தலை சிறந்த காப்பியமாக இன்றளவும் கவனம் பெற்று வருகிறது. இதனை வடித்த புலவர் மதுரைக்கூலவணிகர் சீத்தலை சாத்தனார் ஆவார். ஐம்பெரும் காப்பியங்களில் இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டை காப்பியம் என புகழ் பெற்றவையாகும். சீவகசிந்தாமணி, குண்டலகேசி மற்றும் வளையாபதி என்பது மீதமுள்ள காப்பியங்கள் ஆகும்.

**மணிமேகலையின் காலமும் சிறப்பும்:**

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கிய சங்ககாலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முடிந்தது என்று பல தமிழ் அறிஞர்கள் கூறுவதாகவும், சங்க காலத்தைத் தொடர்ந்து பொருளாதார-சமூக-சிந்தனை மாற்றங்களை ஒட்டி எழுந்த இலக்கியங்கள் பல, அவற்றை சங்கம் மருவிய இலக்கியங்கள் என அழைக்கப்படுவதாகவும், அவற்றுள் தலையாயவை ஐம்பெருங்காப்பியங்கள் எனவும் ஆர். பார்த்த சாரதி, கே.டி.கே தங்கமணியின் மணிமேகலை (2015) பற்றி எனும் நூலில் கூறுகிறார்.

கே.டி.கே தங்கமணி (2015) எனும் ஆய்வாளர் கூறுகையில், மணிமேகலையில் கூறப்பட்டுள்ள சான்றுகளை நோக்கின், திருக்குறள் தோன்றியதற்கு பிறகும், கரிகால் சோழன் காலத்திற்குப் பின்தோன்றியிருக்கலாம் எனக் குறிப்பிடும் இவர், எப்படியும் இது ஒரு புராதான இலக்கியம் என அறுதியிட்டுக் குறிப்பிடுகிறார்.

‘கூலவணிகர் சாத்தனார்காலத்தில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும் இருந்திருக்கிறார். இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் பாடுவதற்கான வேட்கையை தூண்டியவரும் இவரே, அது முடிந்தவுடன், அதனை அடிகள் சொல்லக் கேட்டவரும் இவரே. எனவே, அடிகள் காலமே இவரது காலம் என்பர். சில ஆய்வுகள் அடிகளின் காலம் கி.பி.ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக்குறிப்பிடுகின்றன. இக்கூற்று மெய்பிக்கப்பபடுமாயின், அடிகள் காலத்தோடு சாத்தனார் காலமும் தெளிவாகிடும்’ என்கிறார் ஆய்வாளர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (1942) அவர்கள்.

மணிமேகலையின் சிறப்பாக, பாலி இலக்கியங்களிலும், சமஸ்கிருதத்திலும் இருக்கும் மூல நூல்கள், புத்த சரிதம் ஆகியவை தவிர, இந்திய மொழிகளில் தமிழில் எழுதப்பட்ட தனிச்சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. இலக்கிய செறிவு மிளிர, தமிழகத்தில் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்து செழித்து செல்வாக்குப் பெற்ற சமயவாத்தங்களின் அறிமுகமாக, பண்டை தமிழகத்தின் பண்பாட்டுச் சிறப்பின் பெட்டமாக மணிமேகலை ஒழி வீசுகிறது என்கிறார் ஆர். பார்த்த சாரதி அவர்கள் (கே.டி.கே தங்கமணி, 2015). மணிமேகலை,மனித குலத்தின் துன்பம் போக்கும் சூட்ச்சமத்தை விளக்குவதுடன், அனைத்து உயிரிடத்தும் அன்பு செலுத்துவதையும், இல்லாதவற்கும், இயலாதவற்கும் உணவுளித்து



tamilmanam

பசிப்பிணியை போக்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, மருந்தளிப்பது, அடைக்கலம் தருவது எனபுத்தமத நெறிகளைக் கூறி துறவு வாழ்வை போற்றுகிறது மணிமேகலை என்னும் இதிகாசநூல்.

**நோக்கம்:**

மணிமேகலை குறித்த ஆய்வுகளில் பெரும்பாலானவை மணிமேகலையில் கூறப்படும் அறக்கோட்பாடுகள் குறித்தும், (இரா. சுமதி, 2022)பௌத்த சமயக்கொட்படுகள் குறித்தும் (வி.பி.தேவதத்தா,2023), மற்றும் சமுதாயச் சிந்தனை (போ. சத்தியமூர்த்தி, 2020) மணிமேகலையில் உருவக முறை ( லூர்தேஸ் ஜோவானி, 2002), வரலாற்றுப் பார்வை (கிருஷ்ணசுவாமி ஐயங்கார், 1928), எனப் பண்டைய தமிழர் பண்பாடுகள், பெண்களின் மேம்பாடு, மணிமேகலையில் வரும் கனவு, என ஆராய்ந்து எழுதப்பட்ட பல ஆய்வுகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆகவே இக்கட்டுரையானது, புலவர் கூலவணிகர் சீத்தலை சாத்தனார் என்பவர் எவ்வாறு அக்காலத்தைய சமூகத்தின் பழக்க வழக்கத்தையும், பெரும்பான்மைநம்பிக்கைகளையும் (meta narrative) உடைத்து (Deconstruct), எவ்வாறு பண்பாட்டு சீர்திருத்தகருத்துக்களை முன் வைக்கிறார் என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

**கதாபாத்திரங்கள் மூலம் சமூக கட்டுடைப்பு:**

மணிமேகலை எனும் பெருங்காப்பியத்தில் வரும் கதை மாந்தர்களில், முக்கிய கதா பாத்திரத்தை தாங்கி வரும் நபர்கள், சாதாரண மனிதர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் பெரும்பான்மை சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருப்பது இதன் முதல் சிறப்பு. இதையே, போ. சத்தியமூர்த்தி (2020) அவர்கள் கூறுகையில், "பண்டைக்காலச் சமுதாயத்தில் இடம் பெற்றிருந்த கீழ்த்தட்டு மக்களுடைய வாழ்வியலை சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களும் குறிப்பிடுகின்றன. முடிமன்னர் வாழ்க்கை மேலோங்கியிருந்த காலத்தில் வணிகரின் வாழ்க்கையைச் சிலப்பதிகாரம் படம் பிடிக்க, மணிமேகலைக் காப்பியம் கலை வல்லுநராம் மடந்தையரின் வாழ்வியலைப் படம் பிடிக்கிறது" என்கிறார். அவ்வாறு வரும் கதை மாந்தர்கள் மூலம், இதுவரை பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை கொண்டு, பின்பற்றி வரும் சமூக பழக்க வழக்கங்களில், சமூகத்திற்கு எதிரான, தனி மனிதற்கு தீங்கு விளைவிக்கும், சமூக ஏற்றத்தாழ்வை உருவாகும், சடங்கு மற்றும் பழக்கங்களை சாடி, மனிதம் போற்றும் சீர்திருத்தக் கருத்துகளை முன்வைக்கிறார் சீத்தனார். இவை புத்த மதநெறிகளின் குறியீடாக சித்தரிக்கப்பட்டிருந்தாலும், அவர் கதையுனூடாக, மனிதத்திற்கு எதிரானவற்றை, உடைத்து சீர்திருத்தச் சிந்தனைகளை முன் வைகிறார். இதற்காக கதையில் வரும் மணிமேகலை, ஆபுத்திரன், சுதமதி, விசாகை போன்றோரைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக மணிமேகலை மற்றும் ஆபுத்திரன் கதாபாத்திரங்கள், கதையை சுமக்கும் இரு தூண்களாக வடிவமைத்துள்ளார் ஆசிரியர் சாத்தனார்.

**கணிகையர்துறவும், உணவு தானமும் - மணிமேகலை:**

இதில் மணிமேகலை எனும் துறவரம் பூண்ட கணிகையர் பெண்ணின் மூலம் கதை நகர்த்தப்படுகிறது. கணிகையர் குலத்தின் பாரம்பரிய தொழில் என்பது சமூகத்திற்கு அவசியமற்றது எனக் கருதும் சாத்தனார், அதனை மாதவியின் தாயார் சித்ராபதியின் வாயிலாக, கணிகையர் குல நியதியாக கூறுவதும், அந்நியதியை பின்பற்ற வற்புறுத்தும் சித்ராபதி, சென்றவிடமெலாம் அவமானப்பட்டு திரும்புதலைக் கோடிட்டு காட்டி, மேடை ஏறி அழகு காட்டி ஆடவரை கவர்ந்து அவர்களின் பொருள்களைப் பெற்று, அஃதினை இழந்தபோது வண்டினைப்போல் அவரை விட்டு நீங்கி, வேறிடத்தில் தொடர்புகொண்டு பொருள் சேர்க்கும் பரத்தையர் (கே.டி.கே. தங்கமணி, 2015), மற்றும் அனைத்துக் குற்றமும் விளைவிப்பது பரத்தையர் தொழில் என்றும், அதனைக் குணமாகக் கொண்டு பரப்பும் ஒரு கூட்டம் இருத்தல் இழிவு என்று கூறுவதுடன், சிற்றின்பத்தையும், ஆடம்பர வாழ்கையையும்

கண்டித்து பசியில் இருக்கும் மக்களுக்கு, உணவளித்தலே அவசியமான செயல் எனும் சமூகக் கருத்தை முன்வைப்பதுடன், அவள் வழி மகளையும், பேத்தியையும், துறவரத்தில் புகுத்தி, அமுதசுரபியை பேத்தியின் கையில் கொடுத்து உணவு தானம் வழங்கச்செய்து "***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***" எனும் கூற்றுக்கு சான்றாக்கியுள்ளார் சாத்தனார். முடிவில் சித்ராபதியும் திருந்தி வாழ்தல் என்பதே சாத்தனாரின் பண்பாட்டு சீர்திருத்தமாகும்.

**உணவு தானமும், இந்திரனை நகையாடுவதும் - ஆபுத்திரன்:**

ஆபுத்திரனை மாசற்ற மனைகளில் பிச்சை எடுக்க வைக்கும் சாத்தனார், அவற்றை குருடர், செவிடர், முடவர், நோயாளர், அனாதைகள் போன்றோரை அழைத்து உண்ணச் செய்து, மிச்ச உணவையே ஆபுத்திரன் உண்ணுமாறு சித்தரிக்கிறார். இதன் மூலம்அறத்தை வலியுறுத்துகிறார். அவ்வாறுஅறம் வலுப்பெற்றதன் விளைவாக, சிந்தாதேவியின் மூலம் அற்புத திருவோடு (அமுதசுரபி) கிடைக்கப்பெற்று நாடெல்லாம் வறுமை புகுந்தாலும், அற்புத திருவோடு வறுமையுறாது, அதன் மூலம் உணவை வாரி வழங்கி மகிழ்கிறான் ஆபுத்திரன். அவ்வேளையில் தேவேந்திரன் வந்து ஆபுத்திரனை விண்ணுலகம் அழைக்க, அவரை நகையாடி (போ. சத்தியமூர்த்தி, 2020), அறம் செய்ய வழியில்லா (உணவு வழங்க வாய்ப்பில்லாத) விண்ணுலகத்திற்கு வரமறுத்துக் கூறுவதாக சாத்தனார் சித்தரிக்கிறார்.

மண்ணுலக மனிதர்கள் விண்ணுலகம் செல்வதே வாழ்வின் குறிகோளாக கொண்டிருக்கும் காலத்தில், விண்ணுலகம் செல்ல அறம்செய்ய வேண்டுமெனக்கூறும் காலத்தில், விண்ணுலகம் வர மறுக்கும் ஆபுத்திரன் வழியாக அக்காலத்தைய பெரும்பான்மை சமூகத்தின் நம்பிக்கைகளை உடைத்து, விண்ணுலக இந்திரனையே நகையாடி, விண்ணுலகம் செல்வதை விட, மண்ணுலகில் பசிப்பிணியில் இருப்பவர்களுக்கு உணவளித்தலே தலையாய இன்பம் என புத்த மதக் கருத்துக்களை வலியுறுத்துகிறார்.

இவ்வாறு பசித்தவர்க்கு உணவளித்து மகிழ்ந்த ஆபுத்திரன், உணவு வழங்க மக்கள் இல்லாத போது தனது பசிக்காக மட்டும் அத்திருவோடுவை பயன்படுத்த மறுத்து, உண்ணா நோன்பிருந்து தவத்தில் உயிர் துறக்கும் புரட்சி

"***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***" என்ற கூற்றிற்கான மற்றுமொரு சான்றாக ஆபுத்திரனை படைத்திருக்கிறார் சாத்தனார்.

**வைதீக சடங்கும், ஆபுத்திரனின் புரட்சியும்:**

ஆபுத்திரனின் பிறப்பும், வளர்ப்பும் அன்றைய அந்தணர்களின் சமுதாயத்தினைப் படம் பிடித்துக் காட்டி, அவர்களுக்குரிய உயர்வின்மையைச் சுட்டுகிறது (போ. சத்தியமூர்த்தி, 2020). ஆபுத்திரன் வாழ்ந்த ஊரில், வேள்வியில் பலியூட்ட அந்தணர்களால் பாதுகாத்து வைக்கப்பட்ட பசுவை கட்டவிழ்த்து காப்பாற்றுகிறான். அதனால் அவனையும் பசுவையும் கண்டுபிடித்த அந்தணர்கள் கருணை உள்ளம் கொண்ட ஆபுத்திரனை அடித்துத் துன்பப் படுத்துகிறார்கள். இதனைக் கண்ட பசு, அந்தணர்களை கொம்பினால் குத்தி வீழுமாறு செய்துதப்பிக்க, ஆபுத்திரனோ அக்கிராமம் விட்டு வெளியேறி யாகசம் கேட்டு, மற்றவர்களுக்கும் உணவளித்து வாழ்கிறான்.

இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியது, வைதீக செயல்பாடுகள் குறித்த பார்வை மாற்றத்தை உருவாக்குகிறார் சாத்தனார். உயர் குலத்திலும், கருணையற்ற தீவினை செய்யும் மனிதர் இருப்பதை சுட்டிக்காட்டி, அதுவரை வேள்வி குறித்தும், அந்தணர்கள் குலம் குறித்தும் இருந்த நம்பிக்கையை உடைத்து, பல்லுயிர் நலன் பேணுவதன் அவசியத்தையும் ஆபுத்திரன் வாயிலாக மொழியச்செய்கிறார்.

இது மட்டுமல்லாது, அந்தணர்கள் ஆபுத்திரனை, 'நீ அந்தணன் இல்லை, பசுவின் மகன்' என பலித்து பேசும்போது,

> ***"ஆன் மகன் அசலன்;மான் மகன் சிருங்கி,புலிமகன் விரிஞ்சி; புரையோர் போற்றும்நரிமகன் அல்லனோகேசம்பளன்"*** - என கேள்வி கேட்பதும்,

மற்றொருவர், 'இவன் நடத்தை கெட்ட சாலியின் மகன்' எனத் தூற்றும் போது, ***"முதுமறை முதல் வன்முன்னர் தோன்றியகடவுட் கணிகை காதலஞ் சிறுவர்அருமறை முதல்வர் அந்தனை இருவரும்***" - என பதில் கூறி,

அக்காலத்தில் பெருமையாகப் பேசப்பட்ட முனிவர்களின் பிறப்பு இயல்பைக் குறிப்பிட்டு பதிலடி கொடுத்து, இழிகுலம் என்பதில்லை என உயிர்களிலும், சமூகத்திலும், ஏற்றத்தாழ்வு இல்லை எனக் கூறுவது, சீத்தலை சாத்தனாரின் சமூக கட்டுடைப்புகளுக்கு சான்றாகவும், சமூக சீர்திருத்த கருத்துக்களின் வெளிப்பாடாகவும் காணமுடிகிறது.

**மதங்களும் சுதமதியும்:**

கௌசிகன் எனும் பிராமணரின் மகளான சுதமதி, மாருத வேகனால் கடத்தப்பட்டு பூம்புகாரில் கொண்டுவந்து விடப்படுகிறாள். மகளை காணாது தேடி தந்தையும் பூம்புகார் வந்தடைகிறார். அங்கு மகளைக் கண்ட தந்தை, நடந்ததை அறிந்து, 'இதில் வருத்தப்பட உன் தவறு ஏதும் இல்லையம்மா', என மகளுக்கு ஆதரவு கரம் நீட்டுவதும் மகளுக்காக தானும் பூம்புகாரிலே தங்கி யாசகம் கேட்டு வாழ்வதும், பெண் மகளுக்கு சீத்தனார் தரும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

கௌசிகன் பசுவினால் தாக்கப்பட்டு, இரத்த வெள்ளத்தில் சுதமதி தங்கியிருக்கும் சமணப் பள்ளிக்கு வந்து, சமணத்துறவிகளிடம் உதவி கேட்டும் பொழுது, கொஞ்சமும் இரக்கமின்றி அடிபட்ட கௌசிகன் மற்றும் சுதமதியை, அங்கிருந்து விரட்டியடிப்பதாக பதிவு செய்கிறார் சீத்தலை சாத்தனார். சுதமதி, 'எங்களை யாராவது காப்பாற்ற மாட்டீர்களா?' என இறைஞ்சிக் கேட்டும் யாரும் வராத நிலையில், அந்த வழியாக வந்த புத்த துறவி சங்க தருமன், கௌசிகனை தூக்கிக்கொண்டு புத்த மடத்திற்கு ஓடி, சிகிச்சை வழங்கி காப்பாற்றுகிறார். அதிலிருந்து புத்தமதத் துறவியாக அங்கேயே தங்குகிறார் சுதமதி.

இதில் சமணப் பள்ளி ஆபத்தில் உதவவில்லை என்பதை பதிவு செய்வதுடன், கருணை யற்றவர்களாக இருப்பதையம் குறிப்பிடுகிறார். புத்த துறவிகள் மருத்துவ தானமும் செய்து உயிர்களை காப்பாற்றுகிறார்கள் என்று பதிவதன் மூலம், அடிபட்ட உயிரை காப்பது முதல் கடமை என்று வலியுறுத்துகிறார். இங்கு சுதமதி என்பவள், மாருத வேகனால் கடத்தப்பட்டு, நாசம் செய்து, புகாரிலே விட்டுசென்ற பிறகு, தந்தை அவளை அரவணைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, அத்தகைய அபலைப் பெண்ணை, மணிமேகலை எனும் கதை நாயகிக்கு தோழியாக்கி, அவள் வழி புத்தரின் புகழ் பாடச்செய்து, அரசகுமாரனாகிய உதயகுமாருக்கு அறிவுரை வழங்கும் முக்கிய கதாப்பாத்திரமாக உயர்த்தி வடிவமைத்துள்ளது, சமூக பொது புத்தியை கட்டுடைக்கும், சீர்திருத்தமாகவே கருதமுடிகிறது.

**அரசகட்டளைகளும் மணிமேகலையும்:**

பெருங்கதையாடல்கள் அரசனே முக்கிய பாத்திரத்தை ஏற்று, அரசகுலம் சார்ந்து கதைநகரும் விதமாக அமைந்திருக்கும்; ஆனால் சாத்தனாரோ, அரசகுலம் அல்லாத பெண்களை முன்னிருத்தி, அரசனுக்கு அறிவு வழங்கும் விதத்தில் சித்தரித்திருப்பது, அவரின் சீர்திருத்த சிந்தனையை வெளிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது. சுதமதி மற்றும் மணிமேகலா தெய்வம் ஆகியோர்அறிவுரைத்தும், அதை கண்டுகொள்ளாத உதயகுமாரன் கொலை செய்யபடுகிறார். ஆனாலும்

தந்தையான அரசன் தன் மகனின் தவறை உணர்ந்து, ககந்தன் மற்றும்மனுநீதி சோழன் பரம்பரையில் வந்த தான் தன் மகனுக்கு தண்டனை வழங்க இயலாமல் போயிற்றே என வருந்தும் அரசனைக் காண முடிகிறது. அதே வேளையில் உதயகுமரன் கொலையுண்டதற்கு காரணம் கதை நாயகி மணிமேகலை தான் என கண்டறிந்த அரசன், அவளை சிறைபடுத்துகிறார்.ஆனால் தன் மகனின் இறப்பிற்கு வஞ்சம் தீர்க்க நினைக்கும் அரசிமாதேவி, அவளை கடுங்கொடுமை நிகழ்த்தியும் தோல்வியுற்று மணிமேகலையிடம் மன்னிப்பு கோரி, அரசமாதேவி சாதாரண கணிகையர் குலத்துறவிப் பெண்ணின் காலில் விழுந்து வணங்குவதாக இங்குசித்தரிப்பது, சாதாரண மக்கள் அரச குலத்தை வணங்குமாறு இருந்த பண்பாட்டை உடைத்து, அரசி ஒரு சாதாரண பெண்ணை வணங்குமாறு சித்தரிக்கிறார். இது பொருளின் பெயரால், அதிகாரத்தின் பெயரால் மனிதர்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர் வேறுபாடு இல்லை. அறம் மட்டுமே இங்கு மனிதகுலத்திற்கு அவசியமான ஒன்று என்ற சீர்திருத்தக் கருத்தை மீண்டும் முன் வைக்கிறார் சாத்தனார்.

இதே சோழமன்னன் மாவண்கிள்ளி, ஒருமுறை மணிமேகலை அமுதசுரபி கொண்டு உயிர்கள் கொண்ட பசியை நீக்குகிறாள் என்பதை அறிந்து அவளை வரவேற்று உபசரிக்கிறான். அவளுடைய வரலாற்றைக் கேட்ட பிறகு அவள் விருப்பப்படி, சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுகிறான். இவ்வாறு அரசன் கூட பொது மக்களில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்ற, பசித்தவர்க்கு உணவளித்தல் எனும் அறச்செயல் காரணமாக இருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இங்கு சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும் எனும் சீத்தனாரின் சிந்தனை, ஒரு சீர்திருத்தச் சிந்தனையாகவே காணமுடிகிறது. ‘சிறையிலிருக்கும் அனைவரும் குற்றவாளி’ என்ற பொது புத்தியை உடைக்கிறார், அதே வேளையில், ஒருவருக்கு நேரும் தீங்கு அவரின் முற்பிறப்பில் செய்த வினை எனவும், அதிலிருந்து மீள அறம் செய்ய வலியுறுத்துகிறார்.

**பெண்கள் மூலம் உலக நியதியுரைத்தல்:**

இங்கு நிலையானவை எதுவும் இல்லை என்பதையுணர்த்த ஆசிரியர் எடுத்துக்கொண்ட களம் சுடுகாடு எனும் சக்கரவாளக்கோட்டம். இங்கு வரும் சார்ங்கனின் தாய் கோதமை மற்றும் சம்பாபதி தெய்வத்திற்கிடையேயான உரையாடல்கள் நிலையாமையை உணர்த்த அமைக்கப்பட்ட களமாக பார்க்கமுடிகிறது. வேத மரபில் உள்ள ‘தெய்வங்கள் வரம் தரும்’ என்ற கூற்றை உடைத்து, தெய்வங்களால் உயிரைத் திருப்பித்தர இயலாது எனும் யதார்த்த உண்மையை எடுத்துரைக்கும் களமாகவும் கோதமை மற்றும் சம்பாபதி உரையாடலை அமைத்திருக்கிறார் ஆசிரியர் சாத்தனார் அவர்கள்.

பெரும்பான்மை சமூகம் நம்பிக்கொண்டு இருக்கும் அனைத்து வல்லமை படைத்த ஆண்கள் எதுவும் செய்ய முடியும் என்ற கூற்றை, ஆண்கள் அதுவும் அரசனின் மகனாக இருப்பின் அல்லது செல்வந்தனாக இருப்பின், பெண்களை அபகரிக்க முடியும் என்ற பொது புத்தியை உடைத்து, மணிமேகலை, மாருதி, விசாகை போன்ற பெண் கதாபாத்திரங்கள் மூலம் கட்டுப்பாடற்ற காமம் பெரும் துன்பத்தை கொண்டுவரும் என்பதையும் வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

**முடிவுரை:**

மேற்கண்டவற்றின் மூலம், சீத்தலை சாத்தனார் எனும் ஆசிரியர், அக்கால சமூகம் குறித்த கவலைகொண்டு, அதனை சீர்திருத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துமாறும் வடிவமைத்துள்ளார். அதிலும், பசிப்பிணி எனும் கொடும் அரங்கனை ஒழித்து, அனைத்து உயிர்களும் இன்புற்றிருக்க, அறத்தை முன்னிருத்தி, அவநம்பிக்கைகளை கலைந்து, குற்றமற்ற சமூகத்தை வடிவமைக்கும்

முயற்சியாகவே, சில பண்பாட்டு- சமூக சீர்திருத்தங்களை மணிமேகலை என்னும் இப்பெருங்காப்பியம் மூலம் முன்வைக்கிறார்ஆசிரியர்.

**துணை நூல் பட்டியல்:**

1. கே.டி.கே. தங்கமணி (2015). மணிமேகலைப் பற்றி. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
2. போ. சத்தியமூர்த்தி (2020). மணிமேகலையில் சமுதாயச் சிந்தனைகள். முத்துக்கமலம், பன்னாட்டு இணைய மின்னிதழ்.http://www.muthukamalam.com/essay/literature/p73.html
3. இரா. சுமதி. (2022). மணிமேகலை காட்டும் அறக்மகாட்பாடுகள், சர்வதேச தமிழ் ஆராய்ச்சி இதழ்(தொகுதி 4 இதழ்கள் 19). https://files.core.ac.uk/download/553304969.pdf
4. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. (1942). மணிமேகலைஆராய்ச்சி. தென்னிந்திய சைவ சித்தாந்த படைப்புகள் பதிப்பகச் சங்கம். https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0753.pdf
5. வி.பி.தேவதத்தா, (2023). மணிமேகலை கூறும் பௌத்த சமயக்கொட்பாடுகள். https://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2023-html-p2023166-29107
6. லூர்தேஸ் ஜோவானி.(2002). தமிழ் காவியமான மணிமேகலையின் உருவக முறை பற்றிய பகுப்பாய்வு.
7. கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.(1928).மணிமேகலை வரலாற்று சூழலில், லண்டன்
8. பொ.வேல்சாமி. (2014). மணிமேகலை - தத்துவ உரையாடல் நூலில் விளங்கியதும் விளங்காததும். https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamjun2014/26948-2014-08-08-07-12-53

**Copyright Holder:**
© Author(s) (2026).

**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**
CC BY SA

Tamilmanam